

# நியாயப்பிரமாண

## சட்ட திட்டங்கள்

# நியாயப்பிரமாணம் கட்டளைகள் – 613

**செய்வகைக் கட்டளைகள் – 248**

**செய்யக்கூடாது வகைக் கட்டளைகள் – 365**

## I . செய்வகைக் கட்டளைகள் - 248

### தேவனின் தொடர்பில்:

| | |
|---|---|
| 1. பிதாவாகிய தேவன் ஒருவர் மாத்திரமே உண்டென்று விசுவாசிக்க வேண்டும் | - யாத் 20:2 |
| 2. அவர் ஓரே தேவன் என அறிக்கையிட வேண்டும் | - உபா 6:4 |
| 3. தேவனிடத்தில் முழுமையாக அன்பு கூற வேண்டும் | - உபா 6:5 |
| 4. தேவனுக்கு பயந்து அவருக்கு ஆராதனை செய்ய வேண்டும் | - உபா 6:13 |
| 5. தேவனையே சேவிக்க வேண்டும் | - யாத் 23:25 உபா 11:13 |
| 6. தேவனையே பற்றிக் கொண்டிருக்க வேண்டும் | - உபா 10:20 |
| 7. தேவனுடைய நாமத்தில் ஆணையிட வேண்டும் | - உபா 10:20, 6:13 |
| 8. தேவனைப் பின்பற்ற வேண்டும் (அவருடைய வழிகளில்) | - உபா 28:9 |
| 9. அவருடைய பரிசுத்தமான நாமத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் | - லேவி 22:32 |

### நியாயப்பிரமாணத்தின் தொடர்பில்:

| | |
|---|---|
| 10. அதனைப் பற்றி காலையிலும் மாலையிலும் எப்பொழுதும் பேச வேண்டும் | - உபா 6:7 |
| 11. அதனைக் கருத்தாய் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும் | - உபா 6:7 |
| 12. அவைகளை உன் கையின்மேல் கட்ட வேண்டும் | - உபா 6:8 |
| 13. அவைகளையே உன் சிந்தனையில எப்பொழுதும் இருக்கும்படி கண்களுக்கு நடுவில் (தலையில்) கட்ட வேண்டும் | - உபா 6:8 |
| 14. அவைகளை வீட்டு நிலைகளில், வாசல்களிலும் எழுத வேண்டும் | - உபா 6:9 |
| 15. வஸ்திரங்களின் ஓரங்களின் தொங்கலை உண்டாக்க வேண்டும் | - எண் 15:30 |
| 16. ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே அவற்றை மக்கள் முன்னிலையில் வாசிக்க வேண்டும். | -உபா 31:12 |
| 17. அரசன் அதன் ஓரு பிரதியை எழுதி தன்னிடம் வைத்திருக்க வேண்டும் | -உபா 18:20 |
| 18. ஓவ்வொரு இஸ்ரவேலனும் அதில் ஒரு நியாயப்பிரமாயச் சுருளை தன்னிடம் வைத்தியிருக்க வேண்டும் | - உபா 31:19 |
| 19 உணவுக்குப் பின் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும் | - உபா 8:10 |

### பரிசுத்த ஸ்தலம் மற்றும் ஆசாரியர் தொடர்பில்:

| | |
|---|---|
| 20. இஸ்ரவேலர் ஒரு பரிசுத்த ஸ்தலத்தை கட்ட வேண்டும் | - யாத் 25:8,9 |
| 21. அதனை அவர்கள் பயபக்தியுடன் அணுக வேண்டும் | - லேவி 19:30 |
| 22. அதனைக் காவல் செய்ய வேண்டும் | - எண் 18:4 |
| 23. லேவியர் மட்டும் அதற்கடுத்திப் பணிகளைச் செய்ய வேண்டும் | - எண்18:23 |
| 24. அதன் தொடர்பான பணிகளுக்கு லேவியர் செல்லும் போது கைகளையும் கால்களையும் கழுவ வேண்டும் | - யாத் 30:18,19 |
| 25. ஆசாரியர் தினமும் குத்துவிளக்கை ஏற்ற வேண்டும் | - யாத் 27:21 |
| 26. ஆசாரியர் இஸ்ரவேலை ஆசீர்வதிக்க வேண்டும் | - எண் 6:23-27 |

27. ஆசாரியர் சமுகத்தப்பங்களை நித்தமும் வைக்க வேண்டும் - யாத் 20:30

28. தூப பீடத்தில் தினமும் இருமுறை தூபங் காட்ட வேண்டும் - யாத் 30:7

29. பலி பீடத்தில் எப்போதும் அக்கினி எரிந்து கொண்டிருக்க வேண்டும் - லேவி 6:13

30. பலி பீடத்தின் சாம்பல் தினந்தோறும் எடுக்கப்பட வேண்டும் - லேவி 6:10 11

31. தீட்டுப்பட்ட மனிதர்கள் இதற்கு விலகி நிற்க வேண்டும் - எண் 5:2,3

32. இஸ்ரவேல் ஆசாரியரைக் கனம் பண்ண வேண்டும் - லேவி 21:8

33. ஆசாரியர் சிறப்பான பரிசுத்த ஆடைகளை அணிய வேண்டும் - யாத் 28:2

34. தேவனுடைய பெட்டியைக் கோகாத்தியர் தோளில் சுமக்க வேண்டும் - எண் 7:9

35. அபிஷேக தைலத்தை குறிப்பிட்ட சூத்திரப்படி உண்டாக்க வேண்டும் - யாத் 30:23-33

36. ஆசாரிய குடும்பம் பணிச்சுற்று முறையில் பணிகளைப் பொறுப்பெடுக்க வேண்டும் - உபா 18:6-8

37. நெருங்கின உறவினர் மரணம் தொடர்பில் ஆசாரியர் தீட்டுப்படலாம் - லேவி 23:1-4

38. பிரதான ஆசாரயர் கன்னியை மட்டும் திருமணம் செய்ய வேண்டும் - லேவி 21:13,14

## பலிகளின் தொடர்பில்:

39. நித்திய சர்வாங்க தகன பலியை தினமும் இருமுறை செலுத்த வேண்டும் - எண் 28:2-6

40. பிரதான ஆசாரியர் போஜன பலியை தினமும் இருமுறை செலுத்த வேண்டும் - எண் 28:7,8

41. ஒவ்வொரு ஓய்வு நாளும் சர்வாங்க தகனபலி செலுத்த வேண்டும் - எண் 28:9-10

42. மாதந்தோறும் சர்வாங்கதகனபலி செலுத்த வேண்டும் - எண் 28:11-15

43. பஸ்காவின் தொடர்பின் தகனபலியை (பஸ்காவின்) ஏழுநாட்களிலும் செலுத்த வேண்டும் - எண் 28:18-24

44. புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதல் நாளில் கதிர்க்கட்டினால் போஜனபலியை செலுத்த வேண்டும். - லேவி 23:10-14

45. முதற்பலன் பண்டிகையின் போது சர்வாங்க தகனபலியை செலுத்த வேண்டும் - எண் 28: 26 -30

46. அசைவாட்டும் பலியில் இரண்டு புளிப்பு அப்பங்களைச் செலுத்த வேண்டும் - லேவி 23:17

47. எக்காளப் பண்டிகையின் போது சர்வாங்க தகனப் பலியைப் செலுத்த வேண்டும் - எண் 29: 1 -6

48. பாவ நிவாரண நாளில் பாவ நிவாரண பலியைச் செலுத்த வேண்டும் - எண் 29: 7-11

49. பாவ நிவாரண நாளில் தகனபலியைச் செலுத்த வேண்டும் - லேவி 16:2-34

50. கூடாரப்பண்டிகையின் போது தினமும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்த வேண்டும் - எண் 29:12-34

51. எட்டாம் நாள் விசேஷித்த பலிகளைச் செலுத்த வேண்டும் - எண் 29:35-40

52. அனைத்து இஸ்ரவேல் ஆண்களும் ஆண்டில் முன்று முறை தேவாலயத்துக்குப் பயணம் செய்ய வேண்டும் - யாத் 34:23, உபா 12:5-7

53. அனைத்து இஸ்ரவேல் ஆண்களும் மூன்று பண்டிகைகளின் போது தேவாலயத்தில் வந்திருக்க வேண்டும் -யாத் 23:14-17, உபா 16:16

54. இஸ்ரவேல் அனைவரும் பண்டிகைகளின் மகழ்ச்சி கொண்டாட வேண்டும் - உபா 16:14

55. நீரான மாதம் 14-ம் தேதி பஸ்கா ஆட்டைக் கொல்ல வேண்டும் - யாத் 12:6

56. பஸ்கா ஆட்டின் 14- ம் தேதி ஆட்டைக் கொல்ல வேண்டும் - யாத் 12:18-11

57. நீசான் மாதம் 14- ம் தேதி பஸ்காவை புசிக்காதவர்கள் இரண்டாம் மாதம் 14-ம் தேதி புசிக்க வேண்டும் - எண் 9:10-12

58. பஸ்கா ஆட்டின் மாம்சத்தைப் புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் புசிக்க வேண்டும் -யாத் 12:8, எண் 9:11

59. பண்டிகையின் நாட்களிலும் பலிகளின் போதும், மாத பிறப்புகளிலும் பூரிகைகளை ஊத வேண்டும் – எண் 10:10

60. பலி விலங்குகள் குறைந்து எட்டு நாள் வயதுடையவனாக இருக்க வேண்டும் – லேவி 22:27

61. பலி விலங்குகள் ஊனமற்றவையாக இருக்க வேண்டும் – லேவி 22:21,22

62. அனைத்து போஜன பலிகளும் உப்பினால் சாரமாக்கப்பட வேண்டும் – லேவி 2:13

63. சர்வாங்க தகனபலி மாட்டுமந்தையிலாவது ஆட்டுமந்தையிலாவது செலுத்தப்பட வேண்டும் – லேவி 1:2-17

64. சர்வாங்கதகன பலி செலுத்துமிடத்தில் காட்டு புறாக்களிலாவது புறாக்குஞ்சுளாவது தெரிந்தெடுத்து பாவ நிவாரணப்பலி செலுத்த வேண்டும் – லேவி 6:25:30

65. சமாதனப் பலி செலுத்த வேண்டும் – லேவி 3:1-17

66. சர்வங்க தகனபலி செலுத்தபடுமிடத்தில் குற்ற நிவாரணப் பலி செலுத்தப்பட வேண்டும் – லேவி 7:1-7

67. போஜனப் பலி செலுத்தப்பட வேண்டும் – லேவி 2:-1

68. ஆலோசனைச் சங்கத்தின் ஏதாவது தீர்மானத்தில் குறை ஏற்பட்டால் அதன் உறுப்பினர்கள் பாவ நிவாரணப் பலியை செலுத்த வேண்டும் – லேவி 4:13

69. சாதாரன ஜனங்களின் யாராவது அறியாமையினால் பாவத்துக்குட்பட்டாலும் பாவ நிவாரணப் பலியை செலுத்த வேண்டும் – லேவி 4:27-35

70. விலக்கப்பட்ட ஒன்றை அறிந்தோ அறியாமலோ செய்தால் குற்ற நிவாரணப் பலியைச் செலுத்த வேண்டும் – லேவி 17:18

71. கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றம் செய்தால் கொடுக்கல் வாங்கல் களவு அடிமை விபச்சாரம் போன்ற பாவங்களுக்கு குற்ற நிவாரண பலி செலுத்தப்பட வேண்டும் – லேவி 5: 15-19;20:23

72. பொய்யாணை தீண்டத்தகாதவை தீண்டியது போன்றவற்றுக்கு பாவ நிவாரணப்பலி செலுத்த வேண்டும் – லேவி 5:1-11

73. பாவங்களுக்கு அறிக்கையிட வேண்டும் – எண் 5:6-7

74. விந்தொழுக்கு (பிரமியம்) உடையவன்பாவநிவாரண பலியும் சர்வாங்க தகனபலியும் பலி செலுத்த வேண்டும் – லேவி 15:13-15

75. மாதவிடாய் விலக்கு நாட்களின் பின் பெண் பலி செலுத்த வேண்டும் – லேவி 28:30

76. குழந்தைப் பேறுக்குப் பின் பெண் பலி செலுத்த வேண்டும் – லேவி 12:1-8

77. குஷ்டரோகி சுத்தமான பின் பலி செலுத்த வேண்டும் – லேவி 14:1-32

78.நிலத்தின் வித்திலும் மந்தையிலிருந்து தசமபாகம் செலுத்த வேண்டும் – லேவி 27:30-33

79. முதற்பேறுனைத்தையும் பரிசுத்தப்படுத்த வேண்டும். தலையீற்று பலியிடப்பட வேண்டும் – யாத் 13:2

80. முதற் பேறான புதல்வன் மீட்கப்பட வேண்டும் – யாத் 34:19-20, எண் 18:15

81. கழுதையின் தலையீற்று மீட்கப்பட வேண்டும் – யாத் 34:20,யாத் 13:13

82. கழுதையின் தலையீற்று மீட்கப்படாவிட்டால் கழுத்தை முறித்துப் போடவேண்டும் – யாத் 13:13

83. பலிகளையும், காணிக்கைகளையும் தேவனினுடைய ஸ்தலமாகிய எருசலேமில் செலுத்த வேண்டும் – உபா 12: 5,6

84. கண்ட இடங்களில் பலி செலுத்தாமல் பலி விலங்குகள் தேவாலயத்தில் மட்டும் பலியிடப்பட வேண்டும் – உபா 12:13,14,26

85. பலியை இரத்தத்தோடும் சேர்த்து பலி பீடத்தின் மேல் பலியிட வேண்டும் – உபா 12:27

86. பரிசுத்த விலங்குகளில் ஊனமானவை மீட்கப்பட வேண்டும் – உபா 15:19-22

87. பலி விலங்குக்குப் பதிலாக்கப்பட்ட விலங்கும் பலி விலங்குடன் பரிசுத்தமானது – லேவி 27:10,33

88. போஜனபலியில் மீதியானதை ஆசாரியர் புசிக்க வேண்டும் – லேவி 10:12-13

89. பாவ நிவாரண பலி மற்றும் குற்ற நிவாரணப் பலிகளில் மீதியானவற்றையும் ஆசாரியர் புசிக்க வேண்டும் – யாத் 29:33

90. தீட்டுப்பட்ட பரிசுத்த மாம்சம் சுட்டெரிக்கப்பட வேண்டும் - லேவி 7:19

91. குறிப்பிட்ட நேரத்திற்குள் புசிக்கப்படாத பலியின் மாம்சம் சுட்டெரிக்கப்பட வேண்டும் - லேவி 7:17

## நேர்ச்சைகள் தொடர்பில்:

92. நசரேய விரதம் எடுத்தவர் விரத காலம் வரை முடியை வளர விட வேண்டும் - எண் 6:5

93. விரத காலம் முடிந்தவுடன் தலையைச் சிரைத்து முடியைப் பலியாக்க வேண்டும் - எண் 6:13-18

94. ஒருவன் ஆணைகளையும் நேர்ச்சைகளையும் (பொருத்தனை) நிறைவேற்ற வேண்டும் - எண் 23:21-23

95. பெண் பிள்ளைகள் தொடர்பின் வரையறைகளுக்கு ஏற்ப நிறைவேற்ற வேண்டும் - எண் 30:3-16

## ஆசாரங்கள் தொடர்பில்:

96. அசுத்தமான விலங்குகள் மற்றும் பறவைகளின் மாம்சத்தைப் புசிப்பதும் உடல்களைத் தொடுவதும் தீட்டாகும். - லேவி 11ம் அதிகாரம்

97. அசுத்தமான பிராணிகளில் செத்ததைத் தொடுபவர் தீட்டுப்பட்டவர் - லேவி 11:29-31

98. அவைகளில் செத்தது யாதொன்றில் விழுந்தாலும் அதுவும் தீட்டாகும் - லேவி 11:31-38

99. மாதவிலக்குப் பெண் தீட்டுப்பபட்டவள் - லேவி 15:19-24

100. பிள்ளைப் பேறுக்குப் பின் குறித்த காலம் வரை பெண் தீட்டாக இருப்பாள் - லேவி 12:2

101. குஷ்டரோகி தீட்டுப்பட்டவர் - லேவி 13:2-4, 6

102. குஷ்டரோகி பிடித்த உடை தீட்டானது - லேவி 13:47-59

103. குஷ்டரோகம் பிடித்த வீடு தீட்டானது - லேவி 14:34-57

104. பிரமியம் (விந்தொழுக்கு) உள்ள மனிதர் தீட்டானவர் - லேவி 15:2-15

105. இந்திரியம் தீட்டானது (விந்து கழிதல்) - லேவி 15:16-18

106. உதிர ஊரலுள்ள பெண் தீட்டானவள் - லேவி 15:19, 25-28

107. மனித பிணம் தீட்டானது - எண் 19:11-16

108. தீட்டுக் கழிக்கும் ஜலம் தீட்டுப்பட்டவனைத் தூய்மையாக்கும் தீட்டுப்படாதவர் தொட்டால் தீட்டுப்படுத்தும் - எண் 19:13-22

109. தீட்டுப்பட்டோர் தன் வஸ்திரங்களைத் தோய்த்து தண்ணீரில் முழுகி சுத்தமாக வேண்டும். - லேவி 15:27

110. குஷ்டரோகி குணமாகும் போது குறிப்பிட்ட ஆசாரங்களைக் கடைபிடிக்க வேண்டும் - லேவி 14:2-32

111. குஷ்டரோகி ஏழாம் நாளில் முடியைச் சவரம் செய்ய வேண்டும் - லேவி 14:9

112. சுத்தமாகும் வரை குஷ்டரோகி தலையை மூடாமல் தாடியை மூடிக்கொண்டு வஸ்திரம் கிழித்துத் தீட்டு எனக் கூறி நடக்க வேண்டும் - லேவி 13:45

113. சிவப்புக் கிடாரியின் சாம்பலை தீட்டு கழிக்கும் சுத்திகரிப்புகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் - எண் 19:2-10

## பரிசுத்த ஸ்தலத்துக்கான காணிக்கையின் தொடர்பில்:

114. தங்களைப் பொருத்தனையாக்குவோர் அதற்குரிய மதிப்புப் பொருளைத் தேவாலயத்துக்கு செலுத்த வேண்டும் - லேவி 27:2-8 ,25

115. சுத்தமற்ற மிருகத்தை நேர்ந்தால் ஆசாரியன் மதிக்கும் மதிப்பின்படியான பணத்தைத் தேவாலயத்துக்குச் செலுத்த வேண்டும் - லேவி 27:9-13, 27

116. வீட்டை நேர்ந்தாலும் ஆசாரியர் மதிக்கும் மதிப்பின் படியான பணத்தைத் தேவாலயத்துக்குச் செலுத்த வேண்டும் - லேவி 27:14-15

117. நிலத்தை நேர்ந்தாலும் ஆசாரியர் மதிக்கும் மதிப்பின் படியான

பணத்தைத் தேவாலயத்துக்குச் செலுத்த வேண்டும் - லேவி 27:16-24

118. பரிசுத்த பொருட்களின் தொடர்பில் தவறு செய்தால் பொருளின் மதிப்பும் அதனுடன் ஐந்தில் ஒன்று அதிகமாகவும் செலுத்த வேண்டும் - லேவி 22:14-16

119. நான்காம் ஆண்டு மரத்தின் கனி தூய்மையானது அவை தேவனுக்கு பரிசுத்தமானவைகள் - லேவி 19:23-25

120. நிலத்தின் அறுவடை செய்யும் போது ஓரத்திலிருப்பதைத்தீர அறுக்காமல் விட வேண்டும் - லேவி 19:9

121. சிந்திக் கிடக்கிற கதிர்களை ஏழைக்காகளுக்காக விட்டு விட வேண்டும் - லேவி 19:9,10

122. மறந்து வைத்த அரிகக்டை ஏழைகளுக்காக விட்டுவிட வேண்டும் - உபா 24:19

123. ஒலிவ கொம்பிலே மீந்திருப்பதையும் சிந்துகிற திராட்சைப் பழங்களையும் ஏழைகளுக்காக விட்டுவிட வேண்டும் - லேவி 19:10

124. திராட்சை தோட்ட பின் அறுப்பை அறுக்காமல் ஏழைக்களுக்காக விட்டுவிட வேண்டும் - லேவி 19:10

125. முதற்பலன்கள் தேவாலயத்துக்கும் கொண்டு வரப்பட வேண்டும் - யாத் 23:19

126. முதற்பலன்களின் காணிக்கையை ஆசாரியருக்குக் கொடுக்க வேண்டும் - உபா 18:4, எண் 18:8-14, 21

127. தசம பாகத்தை லேவியருக்குக் கொடுக்க வேண்டும் - லேவி27:30,எண் 18:24

128. இரண்டாம் தசமபாகத்தை எருசலேமில் வைத்து உண்ண வேண்டும் - உபா 14:22-26

129. லேவியர் தசமபாகத்தை ஆசாரியருக்கு வழங்க வேண்டும் - எண் 18:26-32

130. ஒவ்வொரு ஏழ ஆண்டுகளுக்கும் இடையே வரும் மூன்றாம் ஆறாம் ஆண்டுகளில் இரண்டாம் தசம பாகத்தை ஏழைகளுக்கு வழங்க வேண்டும் - உபா 14:28,29

131. தசம பாகங்களை விழங்கிய பின் அறிக்கையிட வேண்டும் - உபா 26:12-19

132. முதற்பலனை ஆலயத்துக்கு கொண்டு வரும் போதும் அறிக்கையிட வேண்டும் - உபா 26:2-4, 10

133. பிசைந்த மாவின் முதற்பங்கை ஆசாரியருக்குக் கொடுக்க வேண்டும் - எண் 15:18-21

## ஓய்வு வருடத்தின் தொடர்பில்:

134. ஏழாம் ஆண்டில் தானே பயிராகும் அனைத்தும் அனைவருக்கும் பொதுவானவை - லேவி 25:2-7, யாத் 23:11

135. ஓய்வு ஆண்டில் நிலத்தை பயன்படுத்தாமல் விட வேண்டும் - லேவி 25: 4-5, 20-22

136. யூபிலி ஆண்டு பரிசுத்தப்படுத்தப்பட்ட வேண்டும் - லேவி 25:10-12

137. பாவ நிவாரண நாளில் எக்காலம் தொனிக்கப்பட வேண்டும் எபிரேய அடிமைகள் விடுதலையாக்கப்பட வேண்டும் - லேவி 25:9-10,13

138. மதில் சூழ்ந்த பட்டண வீட்டை விற்றவர் ஓர் ஆண்டுக்குள் மீட்டுக்கொள்ள வேண்டும் - லேவி 25:29,30

139. யூபிலி ஆண்டின்ல் நிலங்கள் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும் - லேவி 25:24

140.ஏழு ஓய்வு வருஷங்கள் எண்ணப்பட்டு யூபிலி ஆண்டு அறிவிக்கப்பட வேண்டும் - லேவி 25:8

141. ஏழாம் ஆண்டின் எபிரேயரின் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் - உபா 15:3

142. ஏழாம் ஆண்டில் அன்னியர் கடன்களை திரும்ப வாங்கிக் கெபள்ளலாம் - உபா 15:3

## பலி விலங்குகளின் தொடர்பில்:

143. பலி விலங்குகளில் ஆசாரியர் தங்கள் பங்கை பெற்றுக் கொள்ள வேண்டும் - உபா 18:3

144. முதற்பலன் காணிக்கைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் - உபா 15:4

145. ஒருவன் எதையாகிலும் கர்த்தருக்கென்று சாபத்தீடாக நேர்ந்து கொண்டால், அதை விற்கவோ மீட்கவோ படக்கூடாது. -லேவி 27:28

146. இறச்சிக்கான விலங்குளை அடிக்கும்போது விதிகளின்படி அடிக்க வேண்டும் - உபா 12:21

147. அடிக்கப்பட்ட விலங்குகளின் இரத்தம் தரையிலே சிந்தப்பட வேண்டும் - லேவி 17:10-14

148. கூட்டிலிருந்து பறவைக் குஞ்சுகளைப் பிடிக்கும் போது தாய்ப் பறவையை விட்டுவிட வேண்டும் - உபா 22:6-7

149. உணவுக்கான விலங் பரிசோதிக்கப்பட வேண்டும் - லேவி 11:2-8

150. உணவுக்கான பறடிவகளும் பரிசோதிக்கப்பட வேண்டும் - உபா 14:11-19, லேவி 11:2

151. உணவுக்கான வெட்டுக்களிகளும் பரிசோதிக்கப்பட வேண்டும் - லேவி 11:20-23

152. உணவுக்கான மீன்களும் பரிசோதிக்கப்பட வேண்டும் - லேவி 11:9-12

## பண்டிகைகளில் தொடர்பில்:

153. ஆலோசனைச் சங்கம் மாதப்பிறப்பைக் கவனித்து காலங்கயையும் கணிக்க வேண்டும். கர்த்தருக்குரிய பண்டிகைகளை ஆசரிக்கக் கடவீர்கள். - யாத் 12:2, உபா 16:1

154. ஓய்வு நாளில் இளைப்பாற வேண்டும் - யாத் 16:23, 23:12

155. ஓய்வு நாள் தொடக்கம் முதல் முடிவுவரை பரிசுத்தமாக அறிவிக்கப்படும் - யாத் 20:8-11

156. நீசான் மாதம் 14 ஆம் தேதி வீடுகளிலிருந்து புளிப்புள்ள அப்பம் விலக்கப்பட வேண்டும் - யாத் 12:15

157. நீசான் மாதம் 15 ஆம் தேதி யாத்திரமாகம நிகழ்ச்சி கூறப்பட வேண்டும் - யாத் 13:8

158. 15 ஆம் தேதியிலிருந்து 21ம் தேதி வரை 7 நாளளவும் புளிப்பில்லா அப்பம் உண்ணப்பட வேண்டும் - யாத் 12:18

159. பஸ்காவின் முதல் நாளில் இளைப்பாற வேண்டும் - யாத் 12:16, லேவி 23:35

160. பஸ்காவின் ஏழாம் நாளும் இளைப்பாற வேண்டும் - யாத் 12:16

161. நீசான் மாதம் 16 ஆம் தேதி முதல் நாற்பத்தொன்பது நாட்கள் எண்ணப்பட வேண்டும் - லேவி 23:15-16

162. சபை கூடுதலில் இளைப்பாற வேண்டும் - லேவி 23

163. எக்காளப் பண்டிகைளில் இளைப்பாற வேண்டும்ஃ - லேவி 23;24,25

164. பாவ பரிகார நாளில் இளைப்பாற வேண்டும் - லேவி 16:29-31

165. பாவ பரிகார நாளில் உபவாசிக்க வேண்டும் - லேவி 16:29, 23:27-32

166. கூடாரப் பண்டிகையின் முதல் நாளில் இளைப்பாற வேண்டும் - லேவி 23:34,35

167. கூடாரப் பண்டிகையின் 8-ஆம் நாளில் இளைப்பாற வேண்டும் - லேவி 23:36

168. கூடாரப் பண்டிகையின் போது இஸ்ரவேலர் குடில்களில் தங்க வேண்டும் - லேவி 23;42

169. கூடாரப் பண்டிகையின் முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும், ஓலைகளையும் கொண்டு வர வேண்டும். - லேவி 23:40

170. எக்காளப் பண்டிகையின் போது எக்காளப் ஊதப்பட வேண்டும் - எண் 29:1

## சமூக கட்டமைப்பின் தொடர்பில்:

171. ஒவ்வொரு ஆணும் ஆண்டு தோறும் அரைச்சேக்கல் தேவாலயத்துக்குக் கொடுக்க வேண்டும் -யாத் 30:12-16

172. தீர்க்கதரிசிக்குக் செவி கொடுக்க வேண்டும் - உபா 18:15-19

173. தேவன் தெரிந்து கொள்பவனையே இராஜாவாக நியமிக்கப்பட வேண்டும் - உபா 17:15

174. ஆலோசனைச் சங்கத்துக்குக் கீழ் படிய வேண்டும் - உபா 17:8-13

175. வழக்கின் போது நியாயத்தைப் புரட்டும் மிகுதியானவர்களின் பட்சத்தில் சாயாதே - யாத் 23:2

176. நீதிபதிகளும் அதிகாரிகளும் பட்டணங்கள்தோறும் நியமிக்கப்பட வேண்டும் - உபா 16:18

177. அவர்கள் பட்சபாதமின்றி நீதி வழங்க வேண்டும் - லேவி 19:15

178. சாட்சிகள் பற்றிய காரியத்தில் தான் கண்டதை நீதிமன்றத்துக்கு வந்து தெரிவிக்க வேண்டும் - லேவி 5:1

179. சாட்சிகள் ஆராயப்பட வேண்டும் - உபா 13:14

180. பொய் சாட்சிகள் எதனை எதிர்பார்த்து பொய் கூறினார்களோ அந்தத் தண்டனை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் - உபா 19:19

181. நிருபிக்கப்படாத கொலைகளுக்காக சிவப்புக் கிடாரியை கொல்ல வேண்டும் - உபா 21:1-4

182. ஆறு அடைக்கலப் பட்டணங்கள் நிறுவப்பட வேண்டும் - உபா 19:3

183. லேவியர் வசிக்க பட்டணங்கள் வழங்கப்பட வேண்டும் - உபா 35:2

184. மாடியில் கைப்பிடிப் சுவரைக் கட்டி விபத்தைத் தவிர்க்க வேண்டும் - உபா 22:8

## விக்கிரக ஆராதனை தொடர்பில்:

185. விக்கிரகங்களும் தோப்புகளும் அழிக்கப்பட வேண்டும் - உபா 7:5, 12:2,3

186. தொழுகையில் வழி தவறும் பட்டணத்தைச் சட்டப்படி அழிக்க வேண்டும் - உபா 13:17-18

187. அந்நிய தேவ வணக்கமுள்ள பட்டணங்களை அழிக்க வேண்டும் - உபா 20:17-18

188. அமலேக்கியரின் பெயரை முற்றும் அழித்துப் போட வேண்டும் - உபா 25:19

189. அமலேக்கியர்களை முற்றிலும் அழித்துப் போடுவதை மறக்கக் கூடாது. - உபா 25:17-19

## போரின் தொடர்பில்:

190. போரின் அனைத்து விதிகளும் கடைப்பிடிக்க வேண்டும் - உபா 20:110-12

191. போரின் போது சிறப்புப் பணிக்காக ஆசிரியனை நியமிக்க வேண்டும் - உபா 20:2

192. படைத்தளம் கழிப்பிட வசதியுடன் அமைக்கப்பட வேண்டும் - உபா 23:14,15

193. ஒவ்வொரு படை வீரரும் படைத்தளத் தூய்மையைக் கடைபிடிக்க அறிவுறுத்தப்பட வேண்டுத் - உபா 23:9-14

## சமுதாய வாழ்வின் தொடர்பில்:

194. களவு செய்த பொருள் உரிமையாளருக்குத் திரும்ப கொடுக்கப்பட வேண்டும் - லேவி 6:2-5

195. ஏழைகளுக்கு இரக்கம் காண்பிக்க வேண்டும் - லேவி 25:35,36, உபா 15:18

196. எபிரேய அடிமை விடுதலைப் பெற்றுப் போகும் போது எஜமான் பரிசுகளை வழங்க வேண்டும் - உபா 15:7-14

197. ஏழைகள் வட்டியின்றி கடன் பெற வேண்டும் - யாத் 22:25

198. அன்னியருக்கு வட்டிக்காக கடன் கொடுக்கலாம் - உபா 23:20

199. அடகு வாங்கிய பொருளை தேவையென்றால் திரும்பக் கொடுக்கப் பட வேண்டும் - யாத் 22:26, உபா 24:12,13

200. வேலைக்காரனுக்குக் கூலி ஏற்றவேளையில் கொடுக்கப் பட வேண்டும் - உபா 24:14,15

201. வேலை செய்பவர் அதன் விளைச்சலிலிருந்து உண்ணலாம். ஆனால் எடுத்துச் செல்லக்கூடாது. - உபா 23:24,25

202. ஒரு விலங்கு சுமையோடு விழுந்து கிடந்தால் அது பகைவனுடையதாக இருந்தாலும் உதவி அளிக்கப்பட வேண்டும் - யாத் 23:5

203. சகோதரனுடைய விலங்கு வழியிலே விழுந்து கிடந்தால்  உதவ வேண்டும் - உபா 22:4

204. தொலைந்து போனதை அதன்  உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் - யாத் 23:4, உபா 22:1

205. தவறு செய்பவரை கடிந்து கொள்ள வேண்டும - லேவி 19:17

206. தன்னைப் போல் பிறனை நேசிக்க வேண்டும் - லேவி 19:18

207. அந்நியரையும் நேசிக்க வேண்டும் - உபா 10:19

208. சுமுத்திரையான நிறை கல்லும், அளவைகளும் படிகளும் இருக்க வேண்டும் - லேவி 19:36

## குடும்பத்தின் தொடர்பில்:

209. முதியோரையும் ஞானிகளையும் கனம் பண்ண வேண்டும் - லேவி 19:32

210. பெற்றோரைக் கனம் பண்ண வேண்டும் - யாத் 20:12

211. பெற்றோருக்குப் பயப்பட வேண்டும் - லேவி 19:3

212. சந்ததி விருத்திக்காக திருமணம் செய்ய வேண்டும் - ஆதி 1:23

213. விவாகரத்து நியாயப்பிரமாண சட்டப்படி நிறைவேற்றப்பட வேண்டும் - உபா 24:1

214. திருமணம் முடிந்து ஓர் ஆண்டு மணவாளன்  மணவாட்டியுடன் மகிழ்ந்திருக்க வேண்டும் - உபா 24:5

215. ஆண் குழந்தைகள் வீருத்த சேதனம் செய்யப்பட வேண்டும் - ஆதி 17:10-12,லேவி 12:3

216. ஒருவன் பிள்ளையின்றி இறந்நதால் அவனது சகோதரன் கொள்ள வேண்டும் - உபா 24:5

217. ஒருவன் தன் மரித்துப் போன சகோதரனின் மனைவியை விவாகம் பண்ண மனதில்லாதிருந்தால் விட்டுவிடலாம். - உபா 25:1-7

218. கன்னிகையை கற்பழித்தவன் அவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் பின்பு தள்ளிவிடக் கூடாது - உபா 22:29

219. ஒருவன் திருமணமானவுடன் மனைவியின் கன்னித்தன்மையை தவறாகக் குற்றம் சாட்டினால் அவள் தந்தைக்கு அபராதம் செலுத்துவதுடன் அவளை தள்ளி விடக் கூடாது - உபா 22:13-19

220. கற்பழித்தவன் சட்டப்படியான தண்டனையை அனுபவிக்க வேண்டும் - யாத் 22:16-17

221. பெண் சிறைக் கைதியை சிறப்புச் சட்டப்படி நடத்த வேண்டும் - உபா 21:11

222. விவாகரத்தை தள்ளுதற் சீட்டின் அடிப்படையில் செய்ய வேண்டும் - உபா 24:1

223. விபச்சாரத்தில் சந்தேகம் கொண்ட கணவன் அவளை சிறப்புப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் - எண் 5:12-31

## தண்டனைகள் தொடர்பில்:

224. சட்டத்துக்கு ஏற்ப நாற்பது அடி தண்டனை நிறைவேற்ற வேண்டும் - உபா 25:2,3

225. எதிர் பாராமல் கொலை செய்தவர் பாதுகாக்கப்பட வெளியேற்றப்பட வேண்டும் - எண் 35:25

226. ஒருவன் திட்டமிட்டு கொலை செய்திருப்பானாகில் அவன் அடைக்கலப்பட்டணத்தில் ஓடி ஒழிந்தாலும் அவன் கொலை செய்யப்படக் கடவன். - யாத் 21:20

227. ஆள்கடத்தல் செய்பவன் கொலை செய்யப்படக் கடவன். - யாத் 21:16

228. ஒருவன் தன் மனைவியையும் , அவள் தாயையும் சேர்ந்தால் அவர்களனைவரும் சுட்டெரிக்கப்பட வேண்டும். - லேவி 20:14

229. மரண தண்டனையை கல்லெறிந்து நிறைவேற்றலாம் - உபா 22:23-24

230. சில வழக்குகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றிய பின் சரீரத்தை தூக்கிப் போட வேண்டும் - உபா 21:22

231. தூக்கிப்போட்ட பிணத்தை அன்றே அடக்கம் செய்ய வேண்டும் - உபா 21:23

## அடிமைகளின் தொடர்பில்:

232. எபிரேய அடிமைகளைச் சிறப்புச் சட்டப்படி நடத்த வேண்டும் - யாத் 21:2

233. எஜமான் நியமித்துக் கொண்ட எபிரேய அடிமையை திருமணம் செய்யலாம் - யாத் 21:7-9

234. நியமிக்கப்பட்ட அடிமை தகாதவளாய்போனாள் அவளை விடுதலை செய்யலாம். - யாத் 21:8

235. அந்நிய அடிமைகளை, கொடூரமாய் ஆளாமல் அவர்களுக்குரிய சட்டப்படி நடத்த வேண்டும் - லேவி 25:46

## குற்றத்தின் தொடர்பில்:

236. காயம் ஏற்படுத்திய மனிதனுக்குச் சட்டப்படியான நஷ்ட ஈடு வழங்க வேண்டும் - யாத் 21:18,19

237. விலங்கு காயம் ஏற்படுத்தினால் அதின் எஜமான் நஷ்டஈடு வழங்க வேண்டும் - யாத் 21:28-32

238. குழியின் தொடர்பில் விபத்து ஏற்பட்டால் குழியின் எஜமான் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் - யாத் 21:33-36

239. திருடர்கள் தண்டிக்கப்பட வேண்டும் - யாத் 22:1-4

240. கால்நடையை திருடினால் அபாரதம் செலுத்தப்பட வேண்டும் - யாத்22:4

241. விளைச்சளின் அழிவு வழக்குக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் - யாத் 22:5

242. அடைக்கலமாக கொடுத்த பொருளின் தவறு செய்தாலும் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் - யாத் 22:7-8

243. பாதுகாக்கப் படும்படி கொடுத்த விலங்குகளில் தவறு நேர்ந்தாலும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் - யாத் 22:9-12

244. இரவல் பொருளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் - யாத் 22:14-15

245. விற்பது வாங்குவது தொடர்பான வழக்குக்கு நஷ்டஈடு தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் - லேவி 25:14-17

246. உரிமைகள் தொடர்பான வழக்குக்கு நஷ்டஈடு தீர்ப்பு வழங்க வேண்டும் - யாத் 22:9

247. பிற பல செயல்களுக்கும் சட்டப்படி ஏற்ற தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் - யாத் 21:18-25

248. இரண்டு மனைவிகளுடைய ஒருவன் முதல் மனைவியை வெறுத்தால் சேஷ்டபுத்திரபாகம் முதல் மனைவியின் பிள்ளைக்கே கொடுக்க வேண்டும். - உபா 21:15-17

# செய்யக்கூடாது வகைக் கட்டளைகள் - 365

## விக்கிரக ஆராதனை மற்றும் அதனோடு தொடர்புடைய காரியங்களின் தொடர்பில்

1. யேகோவா தேவனைத் தவிர வேறே தேவர்களை வழிபடக்கூடாது. - யாத் 20:3

2. யாதொரு விக்கிரகங்களை உண்டாக்கக் கூடாது - யாத் 20:4

3. யாதொரு விக்கிரகங்களையும் நாடக்கூடாது - லேவி 19:4

4. தேவனுக்கொப்பாக யாதொன்றினாலும் விக்கிரகங்களை உண்டாக்கக் கூடாது - யாத் 20:23

5. எந்த விக்கிரகத்துக்கும் முன்பு பணியக்கூடாது - யாத் 20:5

6. எந்த விக்கிரகத்தையும் சேவிக்கக் கூடாது - யாத் 20:5

7. மோளேகுக்குப் பிள்ளைகளை தீக்கடக்கப் பண்ணக்கூடாது - லேவி 18:21

8. அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடக்கூடாது - லேவி 19:31

9. அசுத்த ஆவியுள்ளவர்களை நாடக்கூடாது. - லேவி 19:31

10. அந்நிய தேவர்களைக் குறித்து விசாரித்து பின்பற்றக் கூடாது. - உபா 12:30

11. எந்த நிலையிலும் தோப்பு விக்கிரகத்தை ஆராதனைக்காக நிறுத்தக் கூடாது - உபா 16:21-22

12. சித்திரந்தீர்த்த கற்களை உருவாக்கக் கூடாது.. - லேவி 26:1

13. கர்த்தருடைய பலிபீடத்தண்டையில் யாதொரு விக்கிரக தோப்புகளை உண்டாக்கக் கூடாது - உபா 16:21

14. அந்நிய தேவர்களின் பேரை உச்சரிக்கக் கூடாது - யாத் 23:13

15. விக்கிரக ஆராதனையை (அவிசுவாசிகளிடமும்) ஊக்குவிக்கக் கூடாது - உபா 13:12-14

16. யூதர்கள் விக்கிரக ஆராதனை செய்ய ஏவக்கூடாது - உபா 13:6-8

17. விக்கிரக ஆராதனையை ஊக்குவிப்போருக்குச் செவி கொடுக்க கூடாது - உபா 13:8

18. விக்கிரக ஆராதனையை ஊக்குவிப்போருடன் இணங்கக் கூடாது - உபா 13:8

19. விக்கிரக ஆராதனையை ஊக்குவிப்போருக்கு இரங்கக் கூடாது - உபா 13:8

20. விக்கிரக ஆராதனையை ஊக்குவிப்பனை தப்பவிடக் கூடாது - உபா 13:8

21 விக்கிரக ஆராதனையை ஊக்குவிப்பனை ஒளித்து வைக்கக் கூடாது - உபா 13:8

22. விக்கிரகங்களின் ஆபரணங்களை எடுக்கக் கூடாது - உபா 7:25

23. அழிக்கப்பட்ட விக்கிரகங்களைத் திரும்பக் கட்டக் கூடாது - உபா 13:16

24. சபிக்கப்பட்ட பொருட்களால் எந்த இலாபமும் அடைய நினைக்கக் கூடாது - உபா 13:17

25. விக்கிரகங்களோடு தொடர்புடைய எதனையும் பயன்படுத்தக் கூடாது - உபா 7:26

26. வேறே தேவர்களின் பெயரால் தீர்க்கதரிசனம் உரைப்பது கூடாது - உபா 18:20

27. கர்த்தரின் நாமத்தில் பொய்யாக தீர்க்க தரிசனம் உரைக்கக் கூடாது - உபா 18:20

28. வேறே தேவர்களின் பெயரால் கூறப்படும் தீர்க்கதரிசனத்தை கேட்கக் கூடாது - உபா 13:2-3

29. பொய் தீர்க்கத்தரிசிக்கு பயப்படக் கூடாது - உபா 18:22

30. விக்கிரக ஆராதனைக்காரரின் வழிபாடுகளை பின்தொடரக் கூடாது - லேவி 20:23

31. விக்கிரக ஆராதனைக்காரரின் பழக்கங்களைப் பின்பற்றக் கூடாது - லேவி 19:26

32. சன்னத்தம் பார்க்கக் கூடாது - உபா 18:11

33. குறி கேட்கக் கூடாது - உபா 18:10,11

34. மந்திரவாதம் செய்யக் கூடாது - உபா 18:10,11

35. மாயவித்தை பழகக் கூடாது - உபா 18:11,12

36. செத்தவர்களிடம் குறி கேட்கக் கூடாது - உபா 18:11,12

37. நாள் பார்க்கக் கூடாது - உபா 18:10,11

38. சூன்யம் செய்யக் கூடாது - உபா 18:10

39. ஆண்கள் உடையை பெண்கள் அணியக் கூடாது - உபா 22:5

40. பெண்கள் உடையை ஆண்கள் அணியக் கூடாது - உபா 22:5

41. விக்கிரக ஆராதனையாளரைப் போல பச்சை குத்திக் கொள்ளக் கூடாது - லேவி 19:28

42. ஆட்டு மயிரும் பஞ்சு நூலும் கலந்த ஆடையை அணியக் கூடாது - உபா 22: 11

43. தலை முடியைக் சுற்றிலும் சவரம் பண்ணக்க கூடாது - லேவி 19:27

44. தாடியின் ஓரங்களைக் கத்தரிக்கக் கூடாது - லேவி 19:27

45. செத்தவர்களுக்காக உடலைக் கீறிக் கொள்ளக் கூடாது - உபா14:1, லேவி 19:28

## வரலாற்று நிகழ்ச்சிகளுடன் தொடர்பானவை

46. எகிப்துக்கு திரும்பிச் சென்று வாழக் கூடாது - உபா 17:16

47. உங்கள் இருதயத்துக்கும், கண்களுக்கும் ஏற்றபடி நடக்கக் கூடாது - எண் 15:39

48. அந்நிய தெய்வ வணக்கத்தில் கானானியரோடு உடன்படிக்கை பண்ணக் கூடாது - யாத் 23:32

49. விக்கிரக ஆராதனை செய்யும் பட்டணங்களில் சுவாசமுள்ள யாதொன்றையும் உயிரோடே வைக்கக் கூடாது - உபா 20:16-18

50. விக்கிரக ஆராதனை செய்யும் மக்களினத்தோடு இரக்கம் காட்டக் கூடாது - உபா 7:2

51. விக்கிரக ஆராதனைக்காரர் உங்கள் நடுவிலே வாழ அனுமதிக்கக் கூடாது - யாத் 23:33

52. விக்கிரக ஆராதனை செய்யும் ஜனங்களுடன் திருமண உறவு வைக்கக் கூடாது - உபா 7:3

53. அம்மோனியரையும் மோவாபியரையும் எப்பொழுதும் கர்த்தருடைய சபைக்குள் அனுமதிக்கக் கூடாது. -உபா 23:3

54. ஏதோமியர்களை வெறுக்கக் கூடாது - உபா 23:7

55. எகிப்தியரை வெறுக்கக் கூடாது - உபா 23:7

56. அம்மோனியருடனும் மோவாபியருடனும் சமாதான உடன்படிக்கை பண்ணக் கூடாது - உபா 23:6

57. முற்றிக்கை போட்டிருக்கும் போது கனிதரும் மரத்தை வெட்டக்கூடாது - உபா 20:19

58. எதிரிகளுக்கு பயப்படக் கூடாது - உபா 7:21

59. அமலேக்கியர் செய்த தீமையை மறக்கக் கூடாது. - உபா 25:19

## நிந்தனை தொடர்பில்

60. கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கக் கூடாது - லேவி 24:16

61. பொய்யாணையிட்டு அவர் நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கக் கூடாது - லேவி 19:12

62. கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கக் கூடாது - யாத் 20:7

63. கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கக் கூடாது - லேவி 22:32

64. தேவனாகிய கர்த்தரை பரீட்சை பார்க்கக் கூடாது - உபா 6:16

65. அந்நிய தேவர்களின் வழிபாட்டு முறைமையின்படி யாவே தேவனை தொழுது கொள்ளக் கூடாது. - உபா 12 : 30

66. மரத்தில் தூக்கிப் போடப்பட்ட உடல் இரவில் தொங்கக் கூடாது - உபா 21:22,23

## பரிசுத்த ஸ்தலம் தொடர்பில்

67. பரிசுத்த ஸ்தல காவலில் அசட்டையாக இருக்கக் கூடாது - எண் 18:5

68. பிரதான ஆசாரியன் பாவநிவாரண நாளைத் தவிர மற்ற நாட்களில் பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லக்கூடாது. - லேவி 16:2

69. உடல் ஊனமுள்ள ஆசாரியன் தகனபலிகளைச் செலுத்தக்கூடாது. - லேவி 21:21-23

70. சரீரக்குறைபாடு உள்ள ஆசாரியன் கர்த்தருடைய அப்பத்தைச் செலுத்தக்கூடாது. - லேவி 21:17,23

71. அங்கவீனமுள்ள ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தை அணுகக்கூடாது. - லேவி 21:18

72. லேவியரும் ஆசாரியரும் ஆசாரியப்பணிகளை மாற்றிக் கொள்ளக் கூடாது - எண் 18:1-7

73. ஆசாரியன் ஆசாரிப்புக்கூடாரத்துக்குள் பிரவேசிக்கும் போது திராட்சை ரசத்தையும் மதுவையும் குடிக்கக்கூடாது. - லேவி 10:9

74. ஆசாரியரல்லாதோர் ஆசாரிப்புக்கூடாரத்திற்குள் பணியாற்றக் கூடாது. - எண் 18:4

75. தீட்டுப்பட்ட ஆசாரியன் ஆசாரிப்புக்கூடாரத்தில் பணியாற்றக் கூடாது. - லேவி 22:2

76. தீட்டான ஆசாரியன் சுத்திகரிப்பு முடியும் வரை பரிசுத்தமானதைப் புசிக்கக்கூடாது. -லேவி 22:6-7

77. சில வகையில் தீட்டுப்பட்டவர்கள் தேவாலயத்திற்குள் செல்லக்கூடாது - எண் 5:3

78. தீட்டுப்பட்டவன் தன்னை சுத்திகரித்துக் கொள்ளாதிருந்தால் அவன் சபையிலிராதபடிக்கு அறுப்புண்டு போவான் - எண் 19: 20

79. வெட்டிய கற்களால் பலிபீடத்தை உண்டாக்கக் கூடாது. - யாத் 20:25.

80. பலிபீடத்தின் மேல் உங்கள் நிர்வாணம் தெரியும்படி படிகளில் ஏறக்கூடாது. - யாத் 20:26

81. பலிபீடத்தின் மேல் அக்கினி அவியக் கூடாது. - லேவி6:13

82. தூபபீடத்தின் மேல் அந்நிய தூபத்தையும் பலிகளையும் செலுத்தக் கூடாது. - யாத் 30:9

83. பரிசுத்த அபிஷேக தைலத்தைப் போல் வேறு தைலம் உண்டாக்கக் கூடாது. - யாத் 30:31-32

84. இந்த அபிஷேக தைலத்தை மனிதர் உடல் மேல் பூசக் கூடாது. - யாத் 30:32

85. தண்டுகள் உடன்படிக்கைப் பெட்டியிலிருந்து கழட்டப்படக் கூடாது. - யாத் 25:15

86. பரிசுத்த தூபவர்க்கத்தைத் தனக்கெனச் செய்யக் கூடாது. - யாத் 30:37

87. மார்ப்பதக்கம் ஏபோத்திலிருந்து விலகக் கூடாது. - யாத் 28:28

88. பிரதான ஆசாரியனின் அங்கி கிழியப்படக் கூடாது. (ஏபோத்) - யாத் 28:32

## பலிகளின் தொடர்பில்

89. பரிசுத்த ஸ்தலத்துக்கு வெளியே பலியிடக் கூடாது. - உபா 12:13,14

90. பலி விலங்கை தேவாலயத்துக்கு வெளியே கொல்லக்கூடாது. - லேவி 17:2-6

91. பழுதுள்ள விலங்கை பலியிடக்கூடாது. - லேவி 22:20, 22-24

92. பழுதுள்ள விலங்கை பரிசுத்தப்படுத்தக் கூடாது. - லேவி 22:22,24

93. பழுதுள்ள விலங்கின் இரத்தத்தை பலிபீடத்தின் மீது தெளிக்கக் கூடாது. - லேவி 22:24

94. பழுதுள்ள விலங்கின் உறுப்புகளை பலியிடக்கூடாது. - லேவி 22:22

95. அவலட்சணமான விலங்குகளைப் பலியிடக்கூடாது. - உபா 17:1

96. புறஜாதியாரும் பழுதுள்ள விலங்கை பலியிட அனுமதிக்கக் கூடாது. - லேவி 22:25

97. பலியிட தீர்மானிக்கப்பட்ட விலங்குக்கு ஒரு தீங்கும் ஏற்படுத்தக் கூடாது. - லேவி 22:21

98. புளித்த மாவையோ, தேனையோ பலிபீடத்தில் செலுத்தப்படக் கூடாது. - லேவி 2:11

99. உப்பில்லாமல் பலிபீடத்தில் ஏதும் செலுத்தப்படக் கூடாது. - லேவி 2:13

100. வேசிப்பணயம், நாயின்கிரயம் ஆகியன செலுத்தப்படக் கூடாது. - உபா 23:18

101. ஒரு விலங்கையும் அதின் குட்டியையும் ஒரே நாளில் பலியிடக் கூடாது. - லேவி 22:28

102. பாவநிவாரண பலியில் ஒலிவ எண்ணெயைப் பயன்படுத்தக் கூடாது. - லேவி 5:11

103. பாவநிவாரண பலியில் தூபவர்க்கமும் பயன்படுத்தக் கூடாது. - லேவி 5:11

104. எரிச்சலின் காணிக்கையில் ஒலிவ எண்ணெயைப் பயன்படுத்தக் கூடாது. - எண் 5:15

105. எரிச்சலின் காணிக்கையில் தூபவர்க்கம் பயன்படுத்தக் கூடாது. - எண் 5:15

106. பலி விலங்குகளை மாற்றக் கூடாது. - லேவி 27:9,10,33

107. (ஒரு வகைப்பலி இன்னொரு வகைக்கு மாற்றக் கூடாது). தலையீற்றான மிருக ஜீவன்களை நேர்ந்து கொள்ளக் கூடாது. - லேவி 27:26

108. சுத்தமான விலங்கின் தலையீற்றை மீட்கக் கூடாது. - எண் 18:17,18

109. தசமபாகமாகக் கொடுக்கப்பட்ட விலங்கை மாற்றவும் மீட்கவும் கூடாது. - லேவி 27:32,33

110. கர்த்தருக்கென்று நேர்ந்து கொள்ளப்பட்ட நிலத்தை விற்கக் கூடாது. - லேவி 27:28

111. கர்த்தருக்கென்று நேர்ந்து கொள்ளப்பட்ட நிலத்தை மீட்கக் கூடாது. - லேவி 27:28

112. பாவ நிவாரண பலிக்கான பறவையின் தலையைத் துண்டிக்கக் கூடாது. - லேவி 5:7,8

113. பலிக்கான விலங்கை வேலை வாங்கக் கூடாது. - உபா 15:19

114. பலிக்கான விலங்கின் மயிரைக் கத்தரிக்கக் கூடாது. - உபா 15:19

115. பலியின் இரத்தத்தை புளித்தமாவுடன் சேர்த்து பலி செலுத்தக் கூடாது. - யாத் 23:18, யாத் 34:25

116. பலி செலுத்தப்படும் பலியின் கொழுப்பை விடியற்காலம் வரை வைத்திருக்கக் கூடாது. - யாத் 23:18

117. பஸ்கா விலங்கின் மாம்சத்தை விடியற்காலம் வரை மீதியாக வைத்திருக்கக் கூடாது. - யாத் 12:10

118. பண்டிகை பலியில் மீதியானது எதுவும் மூன்றாம் நாளில் புசிக்கக் கூடாது. - லேவி 7:17,18, 19:6

119. இரண்டாம் மாதம் அனுசரிக்கும் பஸ்காவில் எதையும் மீதி வைக்கக் கூடாது. - எண் 9:12

120. ஸ்தோத்தர பலியின் மீதியானதை விடியற்காலம் வரை வைத்திருக்கக் கூடாது. - லேவி 22:29,30

121. பஸ்கா ஆட்டின் எலும்பை முறிக்கக் கூடாது. - யாத் 12:46

122. இரண்டாம் மாதம் அனுசரிக்கும் பஸ்கா ஆட்டின் எலும்பை முறிக்கக் கூடாது. - எண் 9;12

123. பஸ்கா புசிக்க வேண்டிய வீட்டிற்கு வெளியே மாம்சத்தைக் கொண்டு போகக் கூடாது. - யாத் 12:46

124. போஜன பலியை புளித்த மாவினால் செய்யக் கூடாது. - லேவி 2:4,11

125. பஸ்கா ஆட்டின் மாம்சத்தைப் பச்சையாகவோ, தண்ணீரில் அவித்தோ உண்ணக் கூடாது. - யாத் 12:9

126. அந்நியர் பஸ்கா ஆட்டைப் புசிக்கக் கூடாது. - யாத் 12:43,45

127. விருத்தசேதனம் செய்யாதவர்களைப் பஸ்கா ஆட்டில் புசிக்க அனுமதிக்கக் கூடாது. - யாத் 12:48

128. கூலியாளும் பஸ்கா ஆட்டில் புசிக்கக் கூடாது. - யாத் 12:45

129. தீட்டானவர் எவரும் பரிசுத்த வஸ்துக்களைச் சாப்பிடக்கூடாது. - லேவி 22:2-6

130. தீட்டான எந்த வஸ்துவிலாவது மூன்றாம் நாள் மீதமான மாமிசம் பட்டால் அதைப் புசிக்கக்கூடாது. - லேவி 7:16-19

131. குறிப்பிட்ட நேரம் தாண்டி பலி மாம்சத்தைப் புசிக்கக் கூடாது. - லேவி 19:6-8

132. தவறான நோக்குடன் செலுத்தப்பட்ட பலிகளைப் புசிக்கக் கூடாது. - லேவி 7 :16-18

133. பரிசுத்தமானதை அந்நியர் எவரும் புசிக்கக் கூடாது. - லேவி 22:10

134. பரிசுத்தமானதை ஆசாரியர் வீட்டில் தங்கியிருப்பவரும் கூலிக்காரரும் புசிக்கக் கூடாது - லேவி 22:10

135. பரிசுத்தமானதை விருத்தசேதனமற்றோர் எவரும் புசிக்கக் கூடாது. - லேவி 22:10

136. பரிசுத்தமானதை தீட்டான ஆசாரியர் புசிக்கக் கூடாது. - லேவி 22:2-9

137. பரிசுத்தமானதை அந்நியருக்கு வாழ்க்கைப்பட்ட ஆசாரியரின் குமாரத்தி புசிக்கக் கூடாது. - லேவி 22:12

138. ஆசாரியனுக்காக இடப்படும் போஜனப்பலியை புசிக்கக் கூடாது. - லேவி 6:20-23

139. பாவ நிவாரண பலியின் மாம்சம் புசிக்கப்படக் கூடாது. - லேவி 6:30

140. அருவருப்பான யாதொன்றையும் புசிக்கக் கூடாது. - உபா 14:3

141. இரண்டாம் தசமபாக கோதுமை புசிக்கப்படக் கூடாது. - உபா 12:17

142. இரண்டாம் தசமபாக திராட்சை ரசத்தைக் குடிக்கக் கூடாது. - உபா 12:17,18

143. இரண்டாம் தசமபாக எண்ணெயைப் புசிக்கக் கூடாது. - உபா 12:17,18

144. சகல படைப்புகளின் தசமபாகத்தையும், பொருத்தனைகளையும், காணிக்கைகளையும் எருசலேமுக்கு வெளியே இருந்தபடி புசிக்கக்கூடாது. - உபா 12:17,18

145. ஆசாரியர் குற்ற நிவாரணப் பலியையோ பாவநிவாரண பலியையோ தேவாலயத்துக்கு வெளியே புசிக்கக் கூடாது -லேவி 10:12,13

146. தகனபலியின் மாம்சத்தையும் அவ்வாறே புசிக்கக் கூடாது. -லேவி 1:9

147. இரத்தத்தைத் தெளிக்கும் முன் பிற பலிகளைப் புசிக்கக் கூடாது. - உபா 12:17

148. ஆசாரியரல்லாதோர் பரிசுத்த பலிகளைப் புசிக்கக் கூடாது. - லேவி 10:13,14

149. ஆசாரியர் முதற்பலனை தேவாலயத்துக்கு வெளியே புசிக்கக் கூடாது. - யாத் 29:33.

150. தீட்டான நிலையில் இரண்டாம் தசமபாகத்தை புசிக்கக் கூடாது. - உபா 26:14

151. துயர நாட்களில் இரண்டாம் தசமபாகத்தை புசிக்கக்கூடாது. - உபா 26:14

152. தசமபாக பணத்தை இழவுகாரியத்திற்காக அன்றி வேறொன்றுக்கும் செலவிடக்கூடாது. - உபா 26:14

153. அந்நியன் பரிசுத்தமான பலிகளின் தசமபாகத்தை புசிக்க அனுமதிக்கக் கூடாது. - லேவி 22:14-16

154. நிர்ணயித்த தசமபாக காணிக்கையை செலுத்த தாமதிக்கக்கூடாது. - யாத் 22: 29

155. பொருத்தனையையும், உற்சாக பலியையும் செலுத்தத் தாமதிக்கக் கூடாது. - உபா 23:21-23

156. பண்டிகைக் காலங்களில் காணிக்கை இன்றி தேவ சந்நிதிக்கு வரக்கூடாது. - உபா 16: 16-17

157. கர்த்தருக்கென்று நேர்ந்து கொண்ட பொருத்தனையிலிருந்து விலகக் கூடாது. - எண் 30:2

## ஆசாரியர் தொடர்பில்

158. ஆசாரியன் விபச்சாரியை மணக்கக் கூடாது. - லேவி 21:6,7

159. ஆசாரியன் கற்பழிக்கப்பட்டவளை மணக்கக் கூடாது. - லேவி 21:6,7

160. ஆசாரியன் விவாகரத்தானவளை மணக்கக்கூடாது. -லேவி 21:6,7

161. பிரதான ஆசாரியன் விதவையை மணக்கக் கூடாது. - லேவி 21 : 10,14

162. பிரதான ஆசாரியன் விலைமகளை மணக்கக் கூடாது. - லேவி 21 : 10,14

163. ஆசாரியர் தலைப்பாகையன்றி ஆலயத்தில் செல்லக்கூடாது. - லேவி 10:6

164. ஆசாரியர் கிழிந்த ஆடையுடன் ஆலயத்தில் செல்லக் கூடாது. - லேவி 10:6

165. ஆசாரியர் தேவாலயப் பணி நேரத்தில் ஆலய வளாகத்தைத் தாண்டி செல்லக்கூடாது .- லேவி10:7

166. ஆசாரியர் குறிப்பிட்ட உறவினர்கள் தொடர்பில் தவிர பிறரால் தீட்டுப்படுத்தப்படக் கூடாது. - லேவி 21:1-4

167. பிரதான ஆசாரியன் ஒரு பிணத்தினாலும் தீட்டுப்படக்கூடாது. - லேவி 21:1,11,12

168. பிரதான ஆசாரியன் தன் தகப்பனுக்காகவும். தாய்க்காகவும் தீட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது. - லேவி 21:11

169. லேவி கோத்திரத்துக்கு தேசத்தில் பங்கு கொடுக்கக் கூடாது. - உபா 18:1

170. லேவி கோத்திரத்துக்கு தன் சகோதரனுடைய சுதந்திரத்தில் பங்கு உண்டாயிருக்கக் கூடாது. - எண் 18:2

171. ஆசாரியன் மரித்தோருக்கான துயர அடையாளமாக தன் தலையை மொட்டையடிக்கவும் உடலைக் கீறிக் கொள்ளவும் கூடாது. - லேவி 21:5

## உணவு தொடர்பிலானவை

172. சுத்தமற்ற விலங்கை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - உபா 14:7,8

173. சுத்தமற்ற மீன்களை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - லேவி 11:10-12

174. சுத்தமற்ற பறவைகளை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - லேவி 11:13-19

175. பறக்கும் ஊர்வனவற்றை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - லேவி 11:20-23, உபா 14:19

176. ஊரும் பிராணிகளை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - லேவி 11:41

177. புழு வகைகளை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - லேவி 11:44

178. புழுக்களை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - லேவி 11:42

179. அருவருப்பான யாதொரு படைப்புகளை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - லேவி 11:43

180. தானாக இறந்து போன விலங்கை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - உபா 14:21

181. பீறுண்ட விலங்கை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - யாத் 22:31

182. மாம்சத்தை இரத்தத்தோடு புசிக்கக் கூடாது. - உபா 12:23

183. இறந்த அசுத்தமான விலங்குகளின் உடலைத் தொடக்கூடாது. - லேவி 11:8

184. யாதொரு மிருகத்தின் மற்றும் பறவையின் இரத்தத்தை இஸ்ரயேலர்கள் சாப்பிடக் கூடாது. - லேவி 7:26,27

185. யாதொரு மிருகத்தின் கொழுப்பை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - லேவி 7:23,25

186. வெள்ளாட்டின் இறைச்சியை பாலில் சமைக்கக் கூடாது. - யாத் 23:19

187. சோரமார்க்கமாய் பின்பற்றுகிற அந்நிய தேவர்களுக்கு பலிகளைச் செலுத்தக்கூடாது. - லேவி 17:7

188. கல்லெறியப்பட்ட மாட்டின் மாம்சத்தை இஸ்ரயேலர்கள் சாப்பிடக்கூடாது. - யாத் 21:28

189. நீசான் மாதம் 16-ம் தேதி ஓமர் அளவு முதற்பலன் காணிக்கை செலுத்தும் முன் புது மாவினால் செய்த அப்பத்தைச் சாப்பிடக் கூடாது. - லேவி 23:10,14

190. அறுப்பின் முதல் காணிக்கைச் செலுத்தும் நாளில் வாட்டிய கதிரை சாப்பிடக் கூடாது. - லேவி 23:14

191. அறுப்பின் முதல் காணிக்கைச் செலுத்தும் நாளில் பச்சைக் கதிரை சாப்பிடக்கூடாது. - லேவி 23:14

192. கானானில் சேர்ந்த பின்பு முதல் மூன்று ஆண்டு கனியைச் சாப்பிடக்கூடாது. - லேவி 19:23

193. திராட்சைத் தோட்டத்தில் பலவகையான தானியங்களை கலந்து விதைத்து உண்ணக்கூடாது - உபா 22:9

194. விக்கிரகங்களுக்கு பானபலி வார்க்கக் கூடாது. - உபா 32:38

195. குடிவெறியும் பெருந்தீனியும் கூடாது. - உபா 21:18-21

196. பாவ பரிகார நாளில் சாதாரணமாக எந்த வேலையும் செய்யக்கூடாது. - லேவி 23:27-32

197. பஸ்கா நாட்களில் புளிப்புள்ள அப்பம் உண்ணக் கூடாது. - யாத் 13:3,4

198. பஸ்கா நாட்களில் புளிப்பு கலந்த எதையும் உண்ணக்கூடாது. - யாத் 13:7, 12:20

199. பஸ்கா பலியுடனே புளிப்புள்ள அப்பம் உண்ணக்கூடாது. - உபா 16:3

200. பஸ்காவின் ஏழுநாளும் புளிப்புள்ள அப்பம் காணப்படக் கூடாது. - யாத் 12:19

201. பஸ்காவின் ஏழுநாட்களும் எல்லைக்குள் எங்கும் புளித்தமா காணப்படக் கூடாது. - யாத் 13:17

## நசரேய விரதம் தொடர்பில்

202. நசரேய விரதம் எடுத்தவர் திராட்சை ரசம் மதுபானம் அருந்த கூடாது. - எண் 6:2,3

203. திராட்சை பழங்களை உண்ணக் கூடாது. - எண் 6:2,3

204. திராட்சை வற்றல்களை உண்ணக் கூடாது. - எண் 6:2,3

205. திராட்சை செடியின் விதையை உண்ணக் கூடாது. - எண் 6:4

206. திராட்சை பழத்தோலை உண்ணக் கூடாது. - எண் 6:4

207. நசரேய விரத காலத்தில் தங்களை தீட்டுப்படுத்தக் கூடாது. - எண் 6:7

208. நசரேய விரத காலத்தில் முடி வெட்டக் கூடாது. - எண் 6:5

209. நசரேய விரத காலத்தில் பிரேதம் கிடைக்கும் கூடாரத்தில் நுழையக் கூடாது. - எண் 6:5

## விவசாயத்தின் தொடர்பில்

210. அறுவடையின் போது வயலின் ஓரத்தில் இருப்பதை முற்றிலுமாக அறுக்கக் கூடாது. - லேவி 19.:9, 23:22

211. அறுவடையின் போது சிந்திக் கிடக்கும் கதிர்களைப் பொறுக்கக் கூடாது. - லேவி 23:22

212. திராட்சை அறுவடையின் போது சிந்தும் பழங்களை பொறுக்கக் கூடாது. - லேவி 19:10

213. திராட்சை தோட்டத்தில் பின் அறுப்பை அறுக்கவும், ஒலிவக் கொம்பில் தப்பியிருப்பதை பறிக்கும்படி திரும்பவும் கூடாது. - லேவி 19:10, உபா 24:20

214. வயிலில் மறந்து வைத்த அரிக்கட்டை திரும்ப எடுக்கக் கூடாது. - உபா 24:19

215. பலவகை விதைளைக் கலந்து விதைக்கக் கூடாது. - லேவி 19:19

216. திராட்சைத் தோட்டத்தில் வேறு விதைகளை விதைக்கக் கூடாது. - உபா 22:9

217. மிருகங்களை கலப்பினமாக பொலிய விடக் கூடாது. - லேவி 19:19

218. இருவகை விலங்குகளைப் பூட்டி உழக் கூடாது. - உபா 22:10

219. போரடிக்கிற மாட்டின் வாயை கட்டக்கூடாது. - உபா 25:4

220. ஏழாவது ஆண்டில் விதைக்கக் கூடாது. - லேவி 25:4

221. ஏழாவது ஆண்டில் தோட்டத்தைக் கிளை கழிக்கக் கூடாது. - லேவி 25:4

222. ஏழாவது ஆண்டில் பயிரானதை அறுக்கக் கூடாது, - லேவி 25:5

223. ஏழாவது ஆண்டில் திராட்சைப் பழங்களை சேர்க்கக்கூடாது. - லேவி 25:5

224. யூபிலி ஆண்டில் விதைக்கவோ கிளை கழிக்கவோ கூடாது. - லேவி 25:11

225. யூபிலி ஆண்டில் அறுவடை செய்யக் கூடாது. - லேவி 25:11

226. யூபிலி ஆண்டில் திராட்சைப் பழங்களைச் சேர்க்கக் கூடாது. - லேவி 25:11

227. நிலங்களை எவரும் அறுதியாக விற்றுவிடக் கூடாது. - லேவி 25:23

228. லேவியரின் பட்டணங்களைச் சூழ்ந்த வெளிநிலம் விற்கக் கூடாது. - லேவி 1:32-34

229. லேவியனை எப்பொழுதும் கைவிடக்கூடாது. - உபா 12:19

## கடன், வாணிபம், அடிமைகள் தொடர்பில்

230. கடன் கொடுத்தவன் ஏழாம் வருஷத்தின் முடிவில் கடனை திரும்பி வாங்கக் கூடாது. - உபா 15:2

231. ஏழாம் ஆண்டு நெருங்குகிறதென்று ஏழைக்கு உதவி மறுக்கக் கூடாது. - உபா 15:9

232. எளியவனுக்கு உதவி மறுக்கக் கூடாது. - உபா 15:7,8

233. எபிரேய அடிமை ஏழாம் ஆண்டில் விடுதலைப் பெற்றுச் செல்லும் போது வெறுமையாய் அனுப்பப்படக் கூடாது. - உபா 15:12-14

234. கடன் திரும்பச் செலுத்த முடியாதவரை நெருக்கக் கூடாது. - யாத் 22:25-27

235. தரித்திரப்பட்ட உன் சகோதரனிடம் வட்டிக்குக் கடன் கொடுக்கக் கூடாது -லேவி 25:35-37

236. கடனாக கொடுக்கிற எந்தப் பணத்துக்கும் பொருளுக்கும் உன் சகோதரனிடம் வட்டி வாங்கக் கூடாது. -உபா23:19,20

237. சிறுமைப்பட்ட உன் சகோதரனுக்கு பணம் கடனாக கொடுத்திருந்தால் வட்டி வாங்குவது போல அவனிடத்தில் வாங்கக் கூடாது. - யாத் 22:25

238. கூலியை தாமதம் பண்ணக் கூடாது. - லேவி 19:13

239. கடன் கொடுத்ததை வாங்க அவன் வீட்டிற்குள் பிரேவேசிக்கக் கூடாது, - உபா 24:10,11

240. ஏழையினுடைய தேவையான பொருளை அடகாக வைத்திருக்கக் கூடாது. - உபா 24:1213

241. விதவையிடம் அடகாக பொருளை வாங்கக் கூடாது. - உபா 24:17

242. ஜீவனுக்கு ஏதுவான பொருளை அடகாக வாங்கக் கூடாது. - உபா 24:17

243. ஓர் இஸ்ரயேலன் பொய் சொல்லக் கூடாது. - லேவி 19:11

244. ஓர் இஸ்ரயேலன் களவு செய்யக் கூடாது. - லேவி 19:11

245. ஓர் இஸ்ரயேலன் கொள்ளையிடக் கூடாது. - லேவி 19:13

246. உன் நிலத்தின் எல்லைக் குறிகளை மாற்றக் கூடாது. - உபா 19:14

247. எவரையும் வஞ்சிக்கக்கூடாது. - லேவி 19:11

248. தன்வசம் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலோ, கொடுக்கல் வாங்கலிலோ இடுக்கண் செய்யக்கூடாது. - லேவி 6:2

249. காணாமல் போன பொருளைக் கண்ட விஷயத்தில் பொய்யாணையிடக்கூடாது. - லேவி 6:3

250. வாணிபத்தில் எவரையும் ஏமாற்றக் கூடாது. - லேவி 25:14

251. உங்களில் ஒருவனும் அநியாயம் செய்யக்கூடாது. - லேவி 25: 17

252. அந்நியரை சிறுமைப்படுத்தக்கூடாது. - யாத் 22: 21

253. அந்நியனை வாணிபத்தில் ஒடுக்கக் கூடாது. - லேவி 19:33,34 யாத் 22:21

254. ஓடிப்போகும் அடிமை உன்னிடத்தில் வந்தால் அவனை எஜமானிடம் ஒப்படைக்கக்கூடாது. - உபா 23:15

255. அவ்வாறு ஓடிவந்த அடிமையை ஒடுக்கக்கூடாது. - உபா 23:16

256. திக்கற்றோரையும் விதவைகளையும் துன்புறுத்தக்கூடாது. - யாத் 22:2

257. எபிரேய அடிமைகளை அதிகம் வேலை வாங்கக்கூடாது. - லேவி 25:39

258. எபிரேய அடிமைகளை விற்கக்கூடாது. - லேவி 25:42

259. எபிரேய அடிமைகளைக் கொடூரமாக ஆளக்கூடாது. - லேவி 25:43

260. அந்நியன் எபிரேய அடிமையைக் கொடூரமாக ஆளக்கூடாது. - லேவி 25: 47,53

261. எபிரேய அடிமைப் பெண்ணை விற்கக் கூடாது. - யாத் 21:8

262. அந்த அடிமை திருமணம் செய்து கொள்ளப்பட்டால் அவளது தேவைகளை எஜமான் சந்திக்க தவறக் கூடாது. -யாத் 21:8-10

263. சிறைபிடிக்கப்பட்டு மனைவியான பெண்ணை விற்கக் கூடாது. - உபா 21: 11-14

264. சிறைபிடிக்கப்பட்டு மனைவியான பெண்ணைக் கொண்டு ஆதாயம் தேடக்கூடாது. - உபா 21:14

265. பிறனுடைய யாதொன்றையும் இச்சிக்கக் கூடாது. - யாத் 20:17

266. அந்நிய விக்கிரகங்களின் பொன்னையும் வெள்ளியையும் இச்சிக்கக்கூடாது. - உபா 7:25

267. பிறனுடைய வயலின் கதிரை கொய்வதைத் தவிர எடுத்துச் செல்லக்கூடாது.. - உபா 23:25

268. பிறனுடைய திராட்சைத் தோட்டத்தில் பிரவேசித்தால் சாப்பிடுவதைத் தவிர பழங்களை எடுத்துச் செல்லக்கூடாது. - உபா 23:24

269. காணாமல் போன உன் சகோதரனுடைய யாதொரு பொருளையும் நீ கண்டால் அவைகளைக் காணாதவன் போல விட்டுவிடக் கூடாது. - உபா 22:1-3

270. சுமையோடு விழுந்து கிடக்கும் விலங்கையோ  கழுதையையோ அலட்சியமாய் விட்டுச் செல்லக்கூடாது. - உபா22:4, யாத் 23:5

271. நிறைகளிலும், படிகளிலும், அளவிலும், அநியாயம் செய்யக் கூடாது. - லேவி 19:35

272. உன்னிடத்தில் நிறையற்ற கற்களையும் படிகளையும் வைத்திருக்கக் கூடாது. - உபா 25:13,14

## நீதியின் தொடர்பில்

273. நீதிபதி முகதாட்சண்யம் பண்ணக் கூடாது. - லேவி 19:15

274. நீதிபதி அநியாயம் செய்யக் கூடாது. - லேவி 19:15

275. நீதிபதி லஞ்சம் வாங்கக்கூடாது. - யாத் 23:8

276. நீதிபதி பயப்படக் கூடாது. - உபா 1:17

277. நீதிபதி ஏழைகளுக்கும; பெரியவனுக்கும் முகம் பார்க்கக்கூடாது -யாத் 23:3, லேவி 19:15

278. நீதிபதி எளியவனுடைய நியாயத்தை புரட்டக்கூடாது. - யாத் 23:6

279. நீதிபதி இரங்கக்கூடாது. - உபா 19:11-13, 21

280. நீதிபதி அந்நியர், விதவைகள் நியாயத்தைப் புரட்டக்கூடாது. - உபா 24: 17,18

281. அபாண்டமான சொல்லை ஏற்றுக் கொள்ளக்கூடாது. - யாத் 23:1

282. வழக்கில் பெரும்பான்மையினர் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடாது. - யாத் 23:2

283. ஒரு நீதிபதி நியாயத்தை கடைபிடிக்காமல் மிகுதியானவர்களின் பக்கம் சாய்ந்து தீர்ப்பளிக்கக் கூடாது. - யாத் 23:2

284. சட்டத்தை அறியாதவரை நீதிபதியாக நியமிக்கக்கூடாது. - உபா 1:13

285. பொய்சாட்சி சொல்லக்கூடாது. - யாத் 20:16

286. கொடுமையானவரின் சாட்சியை ஏற்றுக் கொள்ளக்கூடாது. - யாத் 23:1

287. ஒருவர் பாவத்தை ஒருவர் ஏற்கக்கூடாது. - உபா 24:16

288. ஒரு சாட்சியின் வாக்கினால் தீர்ப்புரைக்கக் கூடாது. -உபா 19:15

289. கொலை செய்யக்கூடாது. - யாத் 20:13

290. குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலை செய்யக்கூடாது. - யாத் 23:7 (உபா 19:15-19)

291. ஒரே  சாட்சியைக் கொண்டு ஒருவனுக்கு மரண தண்டனை தீர்ப்பு கொடுக்கக் கூடாது. - எண் 35:30, உபா 17:6,7

292. கொலை செய்தவன் நியாயசாலையிலே நியாயம் விசாரிக்கப்படும் முன் அவனை மரண தண்டனைக்கு உட்படுத்தக்கூடாது. – எண் 35:12

293. ஒருவரோடொருவர் சண்டை பண்ணுகையில் பின்னால் தாக்குவோருக்கு இரங்கவோ, தண்டனை விலக்கு அளிக்கவோ கூடாது. – உபா 25:12

294. பலவந்தப்படுத்தப்பட்ட பெண்ணுக்கு தண்டனை வழங்கக்கூடாது. – உபா 22:25, 26

295. மரண தண்டனை கைதிக்காக மீட்கும் பொருளை வாங்கக்கூடாது. – எண் 35:31

296. கொலை செய்தவனுக்காகவும் மீட்கும் பொருளை வாங்கக்கூடாது. – எண் 35:32

297. ஒருவனுடைய இரத்தப்பழிக்கு உட்படக்கூடாது. –லேவி 19:16

298. பாதையில் தடைக்கல்லை போடக்கூடாது. – லேவி 19 :14

299. குருடன் இடறும்படி பாதையில் தடுக்கக் கூடாது. – லேவி 19:14

300. குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு அப்பால் அடிக்கக்கூடாது. – உபா 25:2,3

301. கோள் சொல்லித் திரியக்கூடாது. – லேவி 19:16

302. சகோதரனை உள்ளத்தில் பகைக்கக்கூடாது. – லேவி 19:17

303. உன் சகோதரனுடைய பாவத்தை கடிந்து கொள்ளாமல் புறங்கூறி திரியக்கூடாது. – லேவி 19:17

304. பொறாமை கொள்ளக்கூடாது. – லேவி 19:18

305. பழிக்குப்பழி வாங்கக்கூடாது. – லேவி 19:15

306. குஞ்சுகளைப் பிடிக்கும்படி தாய்ப்பறவைகளையும் பிடிக்கக்கூடாது. – உபா 22:6

307. சொறியுள்ள இடத்தை சிறைக்கக்கூடாது. – லேவி 13:33

308. குஷ்டரோகம் குறித்த கட்டளைககளை செய்ய, அசட்டையாக இருக்கக்கூடாது. – உபா 24:8

309. கொலையுண்ட உடல் கிடந்த நிலத்தை உழக்கூடாது. – உபா 21 : 1-4

310. சூனியக்காரியை உயிரோடு வைக்கக்கூடாது. – யாத் 22: 18

311. திருமணம் முடிந்த பின் ஓர் ஆண்டுக்கு போருக்கு போகக்கூடாது. – உபா 24:5

312. உனக்கு கூறப்பட்ட நியாயப்பிரமாணத்துக்கும், நியாயத்தீர்ப்புக்கும் எதிர்த்து நிற்கக் கூடாது. – உபா 17: 8-11

313. நியாயப்பிரமாணத்துடன் வேறு சட்டங்கள் ஒன்றையும் கூட்டக்கூடாது. – உபா 12:32, 4:2

314. நியாயப்பிரமாண சட்டங்களிலிருந்து ஒன்றையும் குறையக்கக்கூடாது. – உபா 12:32, 4:2

315. நீதிபதியை தூஷிக்கக்கூடாது. – யாத் 22: 28

316. அதிபதியை சபிக்கக்கூடாது. – உபா 22:28

317. செவிடனை நித்திக்கக்கூடாது. – லேவி 19:14

318. பெற்றோரை அடிக்கக்கூடாது. – யாத் 21:15

319. பெற்றோரை சபிக்கக்கூடாது. – யாத் 21:17

320. ஓய்வு நாளில் யாதொரு வேலையும் செய்யக்கூடாது, – யாத் 20:10, 31:15

321. ஓய்வு நாளில் வெளியிடங்களுக்குச் செல்லக்கூடாது. –யாத் 16:29

322. ஓய்வு நாளில் நெருப்பு மூட்டக் கூடாது. – யாத் 35:3

323. பஸ்காவின் முதல் நாளில் வேலை செய்யக்கூடாது. – யாத் 12:16

324. பஸ்காவின் ஏழாம் நாளில் வேலை செய்யக்கூடாது. – யாத் 12:16

325. முதற்பலனின் பரிசுத்த நாளில் வேலை செய்யக்கூடாது. - லேவி 23:21

326. எக்காளப் பண்டிகையில் வேலை செய்யக்கூடாது. - லேவி 23:24,25

327. கூடாரப் பண்டிகையில் வேலை செய்யக்கூடாது. - லேவி 23:34,35

328. கூடாரப் பண்டிகையின் எட்டாம் நாளில் வேலை செய்யக்கூடாது. - லேவி 23:36

329. பாவ நிவாரண நாளில் வேலை செய்யக்கூடாது. - லேவி 23:28

## தகாத உறவுகள் பற்றி

330. ஒருவன் தாயுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:7

331. ஒருவன் தகப்பன் மனைவியுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:8

332. ஒருவன் சகோதரியுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:9

333. ஒருவன் உறவு முறை சகோதரியுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:11

334. ஒருவன் தன் குமாரனுடைய மகளுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:10

335. ஒருவன் தன் குமாரத்தியின் மகளுடன்உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:10

336. ஒருவன் தன் மகளுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:17

337. ஒருவன் தாயுடனும், மகளுடனும் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:17

338. ஒருவன் தாயின் குமாரரின் மகளை விவாகம் செய்யக்கூடாது. - லேவி 18:17

339. ஒருவன் தாயின் குமாரத்தியின் மகளை விவாகம் செய்யக்கூடாது. - லேவி 18:17

340. ஒருவன் அத்தையுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:12

341. ஒருவன் சித்தியுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:13

342. ஒருவன் தன் சித்தப்பாவின் மனைவியுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:14

343. ஒருவன் மருமகளுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:15

344. ஒருவன் தன் சகோதரன் மனைவியுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:16

345. ஒருவன் தன் மனைவியின் சகோதரியுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:18

346. ஒருவன் மாதவிலக்காக இருக்கும் பெண்ணுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:19

347. ஒருவன் பிறர் மனைவியுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:20

348. ஒருவன் விலங்குடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:23

349. ஒருவன் பெண் விலங்குடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:23

350. ஒருவன் ஆணுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:22, உபா23:17

351. ஒருவன் தன் தந்தையுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:7

352. ஒருவன் தன் சித்தப்பாவுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:14

353. ஒருவன் தன் நெருங்கிய உறவு பெண்ணுடன் உறவு கொள்ளக்கூடாது. - லேவி 18:6

354. யூதர் புறஜாதியுடன் திருமண உறவு கொள்ளக்கூடாது. - உபா7:1-3

355. இஸ்ரயேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் வேசியாக இருக்கக்கூடாது. - உபா 23:17

356. தள்ளப்பட்ட பெண்ணை வேறொருவன் திருமணம் செய்த பின்பு கணவன் திரும்பவும் திருமணம் பண்ணக்கூடாது. - உபா 24:1-4

357. குழந்தையற்ற விதவையானவள் கணவனின் சகோதரன் இருக்க அவனைத் தவிர பிறரை மணம் செய்யக்கூடாது. - உபா 25:5

358. கற்பழித்து திருமணம் செய்த பெண்ணை விவாகரத்துச் செய்யக்கூடாது. - உபா 22:29

359. கன்னித்தன்மையை அவதூறு பண்ணுவோரும் மனைவியை விவாகரத்து செய்யக்கூடாது. - உபா 22:19

360.விதையடிக்கப்பட்டவன் கர்த்தருடைய சபைக்குள் நுழையக்கூடாது. - உபா 23:1

361. ஆசாரியனானாலும் அண்ணகராக இருந்தால் பலி செலுத்தக்கூடாது. - லேலவி 21:17,20

## அரசாட்சி தொடர்பில்

362. அரசன் இஸ்ரயேல் சந்ததியாரைத் தவிர அந்நியனாக இருக்கக்கூடாது. - உபா 17:15

363. அரசன் குதிரைகளைப் பெருகப்பண்ணக்கூடாது. - உபா 17:16

364. அரசன் பல மனைவிகளைத் திருமணம் பண்ணக்கூடாது. - உபா 17:17

365. அரசன் அதிகமான சொத்தைப் பெருகப்பண்ணக்கூடாது. - உபா 17:17

நியாயப்பிரமாண சட்டதிட்டங்கள்

Version 1 @ Jan 2016.

மின்னஞ்சல் முகவரி : bsa.cbe@gmail.com